06.09.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா.11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அம்பிகா | | |
| க/பெ | கண்ணதாசன் | | |
| கிராமம் | டி.முதலூர் | தொழில் | |
| தாலுக்கா | திருக்கோவிலூர் | வயது | 45/2024 |
| மாவட்டம் | கள்ளக்குறிச்சி | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கில் இறந்துபோன அப்துல்ஜபார் என்பவரை தெரியும். கடந்த 2017ம் வருடம் ஆடி மாதம் 18ந் தேதி என் மகன் கௌதம் திருவண்ணாமலையில் உள்ள கல்லூரிக்கு சென்றுவிட்டு வரும்வழியில் திருக்கோவிலூரில் இறங்கி புத்தகம் வாங்க சென்று போது கார்த்திக் மற்றும் சுபாஷ் என்பவர்கள் தன்னை அடித்து விட்டதாகவும், கௌதம் உடனே ஏன் அக்கா மகன் சுரேசுக்கு தகவல் சொல்லி வரவழைத்து திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு வந்ததாக இரவு என்னிடம் வந்து என் மகன் தகவல் சொன்னார். அதோடு நாங்கள் படுத்துவிட்டோம். மறுநாள் காலை 7மணியளவில் என் வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அந்த காரிலிருந்து 5 ஆண் நபர்களும், ஒரு பெண்ணும் இறங்கினார்கள். பின்னிட்டு அந்த 6 நபர்களின் பெயர்களை கேட்டு தெரிந்துக்கொண்டேன். 1. மோகன், 2. ரவி, 3. சுபாஷ், 4. செல்வம், 5. செல்வி, 6. செல்வியின் கணவர் ஆகியோர் ஆவார்கள். அவர்களின் தற்போது ஆஜரில் உள்ளார். 1ம் எதிரி மோகன், ஏ3 செல்வத்தை ஆகியோர்களை சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். 2ம் எதிரி ரவி (317 crpc மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாசப்படியில் நின்றுகொண்டு எங்கடி உன் பையன் என்று அனைவரும் கோவமாக சத்தம் போட்டார்கள். என் பையன் நிலத்திற்கு போயிருப்பதாக சொன்னேன்.

ஆளுக்கு ஒரு பக்கமாக சத்தம் போட்டு கொண்டு மகனை மறைத்து வைத்திருக்கிறாயா என்று பேசினார்கள். நான் வேண்டும் என்றால் நிலத்திற்கு போய் பாருங்கள் என்று சொன்னேன். நான் பிறகு வீட்டிற்குள் சென்று என் மகனுக்கு போன் செய்து இது போன்று வந்திருக்கும் விவரம் சொன்னேன். இங்கு தற்போது வரவேண்டாம் என்று சொன்னேன். அப்போது என் ஊர் மக்கள் கும்பலாக கூடினார்கள். அந்த நேரத்தில் நாங்கள் எடைப்பாளையத்தை குத்தைக்கு பயிரிடும் நிலத்திற்கு பக்கதுக்கு நிலத்திற்காரரான எடைப்பாளைத்தை சேர்ந்த அப்தூல்ஜபார் என்கிற போலீஸ்காரர் எனக்குபோன் செய்து வேலைக்கு ஆள் கொடுக்க சொன்னார். நான் அவரிடம் இது போன்று எடைப்பாளையத்திலிருந்து 5,6 பேர் வந்து பிரச்சனை செய்கிறார்கள் எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை என்று அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் இருமா நானும் அங்கு வந்துதான் வருகிறேன் என்று சொன்னார். அதன் பிறகு சொன்னபடி அவர் 10 நிமிடத்தில் வந்துவிட்டார். பிறகு என் மகனுக்கு போன் செய்து போலீஸ்காரர் வந்து இருக்கிறார் நீ வா என்று சொன்னேன். அவர் வந்தவுடன் அனைவரும் அவனை மறைத்து நெட்டி தள்ளி காரில் ஏற்ற முயற்சி செய்தார்கள். அதற்கு போலீஸ்காரர் ஏன் ஆம்பளை இல்லா வீட்டில் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் என் மகனை காரில் ஏற்றினார்கள். அப்போது போலீஸ்காரர் அவரது இருசக்கர வாகனத்தை காரின் குறுக்கே நிறுத்தி இப்போது வேண்டுமானலும் மீறி எடுத்து செல்லுங்கள் என்று சொன்னார். அதற்கு அவர்கள் இவர் எப்போது பார்த்தாலும் நம் விசயத்தில் தான் குறுக்கே வருகிறார். வாடா பார்த்துக்கொள்ளலாம் இப்போது போகலாம் என்று சொல்லிவிட்டு அவர்கள் காரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

திருக்கோவிலூரில் காவல் நிலையத்தில் என் மகன் கௌதம் என்பவர் சுபாஷ் என்பவரை அடித்தது சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரணை செய்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை என் மகனை விசாரித்ததாக அவர் சொன்னார். கடந்த 2017ம் வருடம் ஆடி மாதம் 18ந் தேதி என் மகன் கௌதம் திருவண்ணாமலையில் உள்ள கல்லூரிக்கு சென்றுவிட்டு வரும்வழியில் திருக்கோவிலூரில் இறங்கி புத்தகம் வாங்க சென்று போது கார்த்திக் மற்றும் சுபாஷ் என்பவர்கள் தன்னை அடித்து விட்டதாகவும், கௌதம் உடனே ஏன் அக்கா மகன்

சுரேசுக்கு தகவல் சொல்லி வரவழைத்து திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு வந்ததாக இரவு என்னிடம் வந்து என் மகன் தகவல் சொன்னதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஊரில் யாருக்காவது வேலை செய்வதற்கு கூலிக்கு ஆட்களை அழைத்து செல்லும் வேலை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல். ஆட்களை கூப்பிட்டு போவேன். அப்துல்ஜபார் நிறைய பிரச்சனைகளில் தலையிடுவார். நிறைய பிரச்சனைகளில் பஞ்சாயத்து செய்வார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அப்துல்ஜபாருக்கு இரு மனைவிகள் என்றால் சரிதான். போலீசார் விசாரித்த போது நானும் வருகிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்கு அவர் இருமா நானும் அங்கு வந்துதான் வருகிறேன் என்று சொன்னார். அதன் பிறகு சொன்னபடி அவர் 10 நிமிடத்தில் வந்துவிட்டார் என்று காவல் துறையினர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நெட்டி தள்ளி காரில் ஏற்ற முயற்சித்தார்கள் என்று காவல் துறையினர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொன்னேன். அதேபோல் ஆம்பளை இல்லாத வீட்டில் ஏன் வந்து தகராறு செய்கிறீர்கள் என்று அவர் கேட்டதாக காவல் துறையினர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் வெளிநாட்டில் இருக்கிறார். என் கணவர் வெளிநாட்டில் இருக்கிறார் என்ற விவரம் போலீஸ்காரர் ஜபாருக்கு தெரியும். ஜபார் எனது வீட்டிற்கு வருவார். நான் அவரது வீட்டிற்கு போவேன் அப்படி எங்களுக்குள் ஒரு நட்பு இருந்தது என்றால் இல்லை. அதுபோல அவருடைய போன் நெம்பர் எனக்கு தெரியாது. என்னுடைய போன் நெம்பர் அவருக்கு தெரியாது. நான் அவர்கள் ஜபாரை பார்த்து வாடா பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லியுள்ள விவரத்தை காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். சம்பவம் நடக்கும் போது எதிரிகள் எல்லாம் யார் என்றே எனக்கு தெரியாது. அதேபோல் நான் பிரச்சனை நடந்தபோது காவல் துறைக்கு போன் செய்யவில்லை, புகார் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அவர்கள் வந்ததாக கூறும் கார் என்ன கார் என்றே எனக்கு தெரியாது. இந்த வழக்கில் புகார் அளித்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. என்னை காவல் துறையினர் என் மகன் திருக்கோவிலூரில் அடிப்பட்டது சம்மந்தமாக விசாரிக்கவில்லை. போலீசார் என்னை சாட்சி சொல்ல வேண்டும் நீதிமன்றத்திற்கு வாருங்கள் என்று கூப்பிட்டார்கள். போலீஸ்காரர் என்னிடம் நீ வந்து இப்படி எல்லாம் சாட்சி சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள் அப்படி எல்லாம் இல்லை.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

முதலூருக்கும் திருவண்ணாமலைக்கும் இடையே எவ்வளவு தூரம் என்று எனக்கு தெரியாது. பேருந்தில் செல்ல ஒரு மணி நேரம் ஆகும். என் மகன் வரும் வழியில் திருக்கோவிலூரில் நடந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரித்த போது சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் காவல் துறை விசாரணையில் 06.04.2017ம் ஆண்டு ஆடி மாதம் 19ந் தேதி காலை 7 மணியளவில் என் மகன் வயல் வெளிக்கு சென்றுவிட்டான். பின்பு பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ரங்கசாமியின் மகன்கன் மோகன், ரவி, மருமகன் முனியன், மகள் செல்வி, ரங்கசாமியின் பேரன் சுபாஷ் மற்றும் அவருடன் கார் டிரைவர் செல்வம் ஆகியோர் காரில் வீட்டிற்கு வந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதற்கு முன்பு அவர்களை பற்றி தெரியாது. அன்று அவர்கள் வந்தபோது தான் எனக்கு அவர்களை பற்றி தெரியும். காரில் வந்து மிரட்டியது சம்மந்தமாக நாங்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஊரில அன்று 100 பேர் கூட்டமாக இருந்துயிருப்பார்களா என்றால் இல்லை. போலீஸ் ஸ்டேஷனில் அவர்கள் காரில் வந்தது குறித்து என்னையோ அல்லது என் மகனையோ விசாரித்தார்களா என்றால் என் மகனை தான் கேட்கவேண்டும். எனக்கு தெரியாது. என் மகன் ஆடி மாதம் 18ந் தேதி இரவு புகார் கொடுத்தார். என் மகனுக்கும், சுபாஷுக்கும் என்ன தகராறு ஆனது என்று எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் இடத்திற்கும் அப்துல்ஜபார் வீட்டிற்கும் இடையே சுமார் 7 கி.மீ இருக்கும். என் வீட்டில் தகராறு நடந்து அப்துல் ஜபார் வந்துபோன பிறகு எதாவது சமாதானம் நடந்ததா என்றால் சமாதானம் ஆகிவிட்டதாக ஜபார் போலீஸ்காரர் சொன்னார்கள். என் மகன் பிரச்சனை நடந்து சுமார் 1 வருடம் கழித்து அப்துல் ஜபார் இறந்துவிட்டார். அப்துல் ஜபார் இறந்தபோது நான் அங்கு எப்போது போனேன் என்றால் அவர் இறந்த மறுநாள் பிரேதம் வந்தபிறகு போனேன். நான் போன போது அங்கு காவல் துறையினர் இருந்தார்களா என்றால் அங்கு கூட்டம் அதிகம் இருந்தது நான் கவனிக்கவில்லை. ஒரு வருடத்திற்கு முன்பு நடந்த சம்பவம் சம்மந்தமாக நான் காவல் துறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. என் வீட்டிற்கு முன்பு ஒரு வருடத்திற்கு முன் அவர்கள் வந்ததாக நான் கூறுவது பொய் என்றும், காவல் நிலையத்திற்கு சென்று நான் புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. அப்துல்ஜபார் இறந்தது சம்மந்தமாக கற்பனையான ஒரு கதையை உருவாக்கி அதில் எங்களையும், சாட்சிகாள இணைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

அப்துல் ஜபார் கட்டபஞ்சாயத்து செய்யும் நபர் என்றும், அவருக்கு பல முன்விரோதங்கள் இருந்தன என்றும், அதை எல்லாம் மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**3,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

**3,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை**

**இல்லை.**